# அன்பே பிரதானம்

அன்பே பிரதானம் - சகோதர
அன்பே பிரதானம்

பண்புறு ஞானம் பரம நம்பிக்கை
இன்ப விசுவாசம் இவைகளிலெல்லாம்

பலபல பாஷை படித்தறிந்தாலும்
கலகல வென்னும் கைம்மணியாமே

என் பொருள் யாவும் ஈந்தளித்தாலும்
பணிய அன்பில்லால் பயனதிலில்லை

சாந்தமும் தயவும் சகல நற்குணமும்
போந்த சத்தியமும் பொறுமையுமுள்ள

புகழிறு மாப்பு பொழிவு பொறாமை
பகைய நியாயப் பாவமுஞ் செய்யா

சினமடையாது தீங்கு முன்னாது
தினமழியாது தீமை செய்யாது

சகலமும் தாங்கும் சகலமும் நம்பும்-மிகை
படவென்றும் மேன்மை பெற்றோங்கும்